**செய்தி வெளியீடு எண்: 451** **நாள்: 26.07.2019**

# தமிழ் வளர்ச்சித் துறை

பள்ளி/கல்லூரி மாணவர்களிடையே தமிழிலக்கியப் படைப்பாற்றலை வளர்த்திடும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களால் 'தமிழ் மன்றம்' 2003 – 2004ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. 2019–2020ஆம் ஆண்டிற்கு பள்ளி/ கல்லூரி மாணவ, மாணவர்களிடையே படைப்புத்திறனை வளர்க்கும் நோக்கில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**அனைத்து மாவட்டங்களிலும் 11,12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடைபெறும் நாள் 07.08.2019.**

**அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடைபெறும் நாள் 09.08.2019**

போட்டியில் கலந்துகொள்ளும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியர்/ கல்லூரியின் முதல்வரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையைப் பெற்று போட்டி நாளன்று மண்டில/மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்/உதவி இயக்குநர்களிடம் நேரில் அளிக்க வேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். போட்டிக்கான தலைப்புகள் போட்டி நடைபெறும் நாளன்று அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெற்று பரிசுத்தொகை வழங்கப்பெறும்.

ஒவ்வொரு போட்டிக்கு ஒருவர் வீதம் மூன்று மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.

**மாவட்ட அளவிலான பரிசுத்தொகை**

| கவிதைப்போட்டி | கட்டுரைப்போட்டி | பேச்சுப்போட்டி |
|---|---|---|
| முதல் பரிசு ரூ.10,000/– | முதல் பரிசு ரூ.10,000/– | முதல் பரிசு ரூ.10,000/– |
| இரண்டாம் பரிசு ரூ.7000/– | இரண்டாம் பரிசு ரூ.7000/– | இரண்டாம் பரிசு ரூ.7000/– |
| மூன்றாம் பரிசு ரூ.5000/– | மூன்றாம் பரிசு ரூ.5000/– | மூன்றாம் பரிசு ரூ.5000/– |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**